இப்பிரச்னை குறித்து மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு எழுதி, விளக்கம் ஏதேனும் தர விரும்பினால், தரலாம் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அவரிடமிருந்து விள்க்கம் பெற்று. விளக்கத்தையும் பாசீலித்து இப்பிரச்னை குறித்து எனது தீர்ப்பைப் பின்னர் தெரிவிக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பாயிண்ட் ஆர் ஆர்டர். பொதுவாக நம்முடைய ச பயில் நாம் பின்பற்றுகின்ற மரபு ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினர் மீது உரிமைப் பிரச்னை கொடுத்தால். சம்பந்தப்பட்ட உறுப்பினர்க்கு அந்தத் தகவலைக் கொடுத்து, அவரும் இங்கே வந்து, அவருடைய முன்னி லயில் எடுத்துக் கொள்வது என்பதுதான் நாம் பின் பற்றி வருகின்ற மரபாகும். ஆனால், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவர் கட்சியைச் சார்ந்தவர்களும் இதற்கு முன்னாலேயே இந்த சட்டமன்றம் முடிகின்றவரையில் கலந்து கொள்வதில்லை என்று அறிவித்த பின்னர், அவர்கள் நிச்சயமாக வர மாட்டார்கள் என்பது தெரிந்ததற்குப் பின்னால், இன்றைக்கு இந்த உரிமைப் பிரச்னையை எடுத்துக் கொள்வது என்பது முறைதானா? அவர்கள் வந்ததற்குப் பிறகு எடுத்துக் கொள்வது சரியா இருக்காதா? உங்கள் தீர்ப்பை நான் கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அலுவலகத் திலிருந்து தபால் அனுப்பி, இந்தப் பிரச்னை எடுக்கப்பட்டிருக் கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் தீர்மானங்கள்.

அ. விதி 58ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாளைக்கு ஒரு பொருள் பற்றி எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற பேரவை விதி 58–ஐ தளர்த்தி, இன்று பேரவையில் இரண்டு பொருள்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது.

[முற்பகல் 11-20]

5. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

இந்தி கற்றால்தான் பதவி உயர்வு என்பதன் மூலம் இந்தி திணிக்கப் பெறுவது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ரா, உமாநாத், இரா. கிருஷ்ணன். பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ப. நெடுமாறன் ஆகியோ மத்திய அரசு பணிகளை